தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௰	மலர்
சரு	சௌமிய, ஐப்பசி 1969–அக்டோபர்-நவம்பர்	எ

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

தமிழ்நாட்டு ஓவியங்கள்

திரு J. M சோமசுந்தரம் பிள்ளை பி. ஏ., பி. எல்.

மதுரைப் பொற்றாமரைக் குள ஓவியங்களுக்குச் சமீப காலமாக, மற்றும் இரு ஓவியங்களைக் குறித்து இங்கு கூற வேண்டும் ஒன்று சிதம்பரம் சிவகாமசுந்தரியாரின் தனிக் கோயில் வெளிமுகப்பு. மேல்கட்டிகளில் உள்ளன. சுமார் 200 ஆண்டுகட்கு முன்னதாகும். தில்லைக்கோயிலின் தனிப் பட்ட சிவலிங்கம், பல்லவ அரசனுக்கு ஒரு வேடனால் காண்பிக்கப்பெறுவதும், அவன் அதன் அணித்துள திருக் குளத்தில் மூழ்கி எழுந்து தன் உடல்நோய் நீக்கமுற்று



சித்தண்ணவாயில் அருகர்கோயில்முகப்பு நடுமண்டப மேல்தள தாமரைத்தடாகம். (7-வது நூற்றாண்டு.

பக்கம் 158)

சித்தண்ணவாயில் அர்த்த மண்டபத்தூணில் காணும் நடிகைக் கணிகை.
பக்கம் 159] [7-வது நூற்றாண்டு

பொன்னிறமாகக் கண்டு, சிவலிங்க வழிபாட்டுமுறை தொடங்கப்பெறுவதும் இன்னும் பலவுமாகும், தவிரவும் சமீப காலத்தவையான தருமை ஆதீன தம்பிரான்கள், வேதபாடசாலை முதலிய விபரங்களையும் அங்கு தோன்றுவதாகும் (2).

மற்றொன்று; திருவாரூர் திருவாசிரிய மண்டப கீழ்ப்புறம் மேற்கட்டியில் காண்பன. வெகுவாக மகாராட்டிர பாணியில் கறுப்பும் சிவப்பும் கலந்த வண்ணங்களில்

தோன்றுவன. வெகுவாக தட்ப வெப்ப நிலைகளால் சிதைவுருது நன்கு புலப்படுவன. இவை திருவாரூர் புற்றிடங் கொண்டார் திருத்தனி. பின்னர் திருவாரூர்த் தியாகேசர் கோயிலாகப் பெரும்பேறு பெற்ற சரிதையை விளக்குவதாகும். இந்திரன், இராக்கதரின் துன்பம் பொருது சோழவமிச முசுகுந்த சக்கரவர்த்தியின் உதவி பெற்று இராக்கதரை வென்று, தன் நன்றியைத் தெரிவிக்கத் தான் வழிபாடு செய்திருந்த சப்தவிடங்க தியாகேசரை, அச்சோழனுக்குக் கொடுத்ததுவும், விடங்கரைச் சோழன் திருவாரூருக்குக் கொணர்ந்து திருக்கோயிலில் அமைத்தலும், பிறவும் காண்பதாகும். இவை யாவும் ஒவ்வொரு தமிழன் பனும் காணும் பேறு பெறுவதாகும் தமிழ்நாட்டுக் கோயில் களுள் திருவாரூர் மிகச் சிறப்புறும் என்பதும் ஒவ்வொருவரும் காணவேண்டும்.

தஞ்சை மகாராட்டிர ஓவியங்கள்

தஞ்சையில், நாயக்க மன்னரது கலையுகம், பதினேழாவது நூற்றுண்டின் இறுதியில் விசயராகவ மன்னன் திடீரென மறையவே, மகாராட்டிரர், அதனை அடுத்து 1674–1856 வரை தஞ்சையை ஆண்டனர். அக்காலத்திய மன்னர்களுள் இரண்டாம் சரபோசியின் [1798–1833] முப்பத்தைந்து ஆண்டுகளே அதன் உச்சநிலையைக் காட்டுவதாகும் பொதுவாக தீவிர சமயப் பற்றுடையவராக பல கலைகளையும் வளர்த்து வந்தனர் அவற்றுள், ஓவியம் ஒரு உன்னதப் பாணியை அடைந்ததெனவும் கூறலாம்.

இந்தியக் கலைச் சரிதத்தில் தஞ்சை ஓவியங்கள் பொதுவாக இடம்பெறுவதில்லை. ஆசிரியர் இதற்கு முந்திய மொகலாயப் பாணியையும் - அதனையடுத்து வங்காள Abeandranath. தாகூர்–மலையாள இரவிவர்மாவுடன் நிறுத்துகிறார்கள்.

தஞ்சை மகாராட்டிர ஓவியம் ஒரு சரித்திரத் தொடர்பை ஒட்டிய தெனக் காணலாம். 1612-இல் போர்த்துக்கேசியர் நாகப்பட்டினத்தை தமதாக்கினர் அதன் பின்னர் டச்சுக்காரர் தரங்கம்பாடியில் கோட்டைக் கொத்தளத்துடன் நாட்டின் வளத்துடன் உறவாடினர். பின்னர் டேனிசுகாரர் கிறித்துவ மதத்தைப் பரப்ப தஞ்சையைத் தமதாக்கி அதன் பாதிரியார்

சுவார்ட்சு Schwartz, இந்நாட்டு மன்னர் சரபோசியையே தமது மாணவராகவும் கொண்டார். இந்நிலையில் அக்காலக் கலையும் ஒருவாறு ஐரோப்பியப் பாணியை அடைந்து, அதன் சின்னங்கள் அக்கால ஓவியத்தினில் இரண்டறக் கலந்திருப் பதையும் காணலாகும்.

தஞ்சை ஓவியங்கள் மரச்சட்டத்திலும், (Canvas) துணிகளி லும் சட்டத்தின்மேல் பசையினுல் ஒட்டப்பெற்ற மிருதுவான துணிகளின்மேலும் தந்தத்திற் தீட்டப்பெற்றும், அதனிடை யில், புளியம்பசையைத் தடவிய உப்புசங்களின் மேல் பல நிற கண்ணுடித் துண்டுகள், ஒளிபெற்ற வெள்ளி தங்க ரேக்குகள் இடையிடையே விரவியும் அழகுபெற்று மிளிரக் காணலாம். ஓவிய வண்ணங்கள், அரக்கு-Cochineal கிரிமிஞ்சி, மஞ்சள், ஊதா, கருநீலம், சிவப்பு, பச்சை, ரோசா முதலியன. இவ்வண் ணங்கள், அக்காலத்தில் மேலை நாட்டினின்று கொணரப்பட்ட தாயினும், உள்நாட்டில் பச்சை இலைகளால் ஆக்கப்பெற்ற வண்ணங்களையே அவர்கள் வெகுவாக உபயோகித்தனர். இவ்வண்ணங்கள் நீண்ட ஆயுளுடன்-நிறத்தின் பொலி வுடன் இருக்க அவர் அறிந்திருந்தனர்.

மகாராட்டிர மன்னரால்போற்றப்பெற்ற ஓவியங்கள் வெகு வாக சமய உணர்வுடையன மகிஷாசுரமர்த்தனி—சுப்பிரமணி யர்—பாலகிருஷ்ணன்—கணபதி-சரசுவதி-இலக்குமி—போன்ற கடவுளர் உருவங்களும், அரசரும் அரசியும், அரசினா உருவங்கள், அரச ஊர்வலங்கள் சில பிரதானிகள் போன்ற மானிட உருவங்களையும் இவ்வோவியங்களில் இடம் பெற்றன. அவற்றின் மேநாட்டுப்பாணி அவை புகைப்படம் போன்ற இருக்கைகளிலும்-நாடடின் வளத்தைத் தொனியும் (Laundscapes) பாணிகளிலும், அரண்மனையில் தோன்றும், விளக்கு (Chandeliers) களிலும் தெரியவருவதாகும்.

இத்தஞ்சை ஓவியங்கள், சரபோசி மன்னரால் தாம் தீட்டிய ஓவியங்களுடன் மற்றவைகளையும் சேகரித்து தஞ்சை சரசுவதிமகாலிலிலும் இன்னும் அரண்மனைத் திருக்கோயில் சந்திரமௌளீசுவரர் ஆலயத்திலும், வைத்திருப்பது, அவரது சிறந்த கலைப்பண்பிற்கே சான்ருகும். இவ்வோவியங்களின் இன்றும் சிலவற்றை கும்பகோணம், திருவாரூர் போன்றபெரிய திருக்கோயிற் சுவர்களிலும்—பெருமாடங்களின் சுவர்களிலும்

தஞ்சை மகாராட்டிர மன்னர் சரபோசி – II.
[மகாராட்டிர ஓவியம் 18-வது நூற்றுண்டு]

காண்பதாகும். சென்னை மாநகர் – தொல் – பொருட்காட்சி நிலையமாகிய மியூசியத்திலும் ஒரு தனியிடம் கொடுத்து Tanjore Paintings எனச் சிறப்பித்திருப்பதையும் காணலாம்.

இத்தஞ்சை ஓவியங்கள் சரபோசியின் பின்னர், போற்றுவாரன்றி மறைந்ததெனவே கூறலாம். எஞ்சிய சில இன்னும் கிடைப்பின் அவற்றைச் சேமித்து வைப்பது நம்மனோர் கடமையெனவும் கூறுதல் அமையும்.

மகாராட்டிர ஓவியம். தஞ்சை மன்னர் பவனிக்காட்சி. 19-வது நூற்றாண்டு.

கேரள—தமிழ் நாட்டு ஓவியங்கள்

சமீபகாலத்திற்றான் கேரள நாடு தமிழகத்திலிருந்து பிரிந்து போயினமையின் அந்நாட்டின் ஓவியக்கலை பற்றியும் இவ்வரலாற்றில் இடம் பெறுவதாகின்றது. அவைகளின் காலவரையறை பதினாறாவது நூற்றாண்டின் நடுவிலிருந்து பத்தொன்பதாவது நூற்றாண்டுவரையாகும். இவைகளில் கொச்சியிலுள்ள மட்டாஞ்சேரி அரண்மனையில் பொதிந்துள்ளவை மிகச் சிறப்புற்றவை. அவ்வோவியங்களை 1940-ஆம் ஆண்டில் கொச்சி இராச்சிய அரசியலில், உயர்திரு ஆர். கே. சண்முகஞ் செட்டியார் அதன் திவானாக இருந்தபோது ஒரு சிறந்த வகையில் இவைகளை வெளியிட்டுள்ளார்கள்[1]. இன்னும் இவை இவ்விராச்சியப் பல கோயில்களிலும், திருச்சிவபுரத்திலுள்ள (திருச்சூர்) ஸ்ரீமூலம் சித்திரசாலையிலும், திருவாங்கூர் இராச்சிய பத்மநாதபுரம் முதலிய கோயில்களிலும் திருவனந்தபுரம் கண்காட்சிசாலை ஓவியப்

(1) Cochin Murals-Government of Cochin—1940.

தஞ்சை அரசியார், மாதுஸ்ரீ காமாட்சி அம்பாபாய் சாகேப் அவர்களுக்கு இரவிவர்மா வரைந்தளித்த ஓவியம்.

[19-வது நூற்றாண்டு]

பகுதியிலும் சிறந்த முறையில் தீட்டப்பெற்றுள்ளன. இச் சித்திரங்களில் பொதுவாகக் காண்பவை இராமாயணக் காவியத்தைச் சார்ந்தனவாகவும், திருக்கோயில்களில் காண்பவை மகாபாரதக் காவியத்தை விளக்குவனவாகும். காவிய பாவங்கள் சிறப்பாகக் கதாக்களி நா... பண்பை உயர்த்துவன. அதன் உயிர்த்தொ... றிலும் மிளிருவதைக் காணலாம். இன்...

மக்களின் நடை, உடை, ஆபரணங்கள், நாகரிகப் பண்பு களையும் உணர்த்தும். ஓவியங்கள் பலவகை வர்ணங்களால் தீட்டப்பெற்றிருப்பினும், முகபாவங்களின் மேன்மையும்,

தஞ்சைப் பெருவுடையார் திருக்கோயில் சோழர்கால ஓவியம். பக்கம் 190]

சுந்தரர் கயிலாயம்செல்ல தேவகந்தர்வர் நடனத்துடன் பூமாரிசொரிந்து வழிநடத்திச் செல்லுதல். [11-வது நூற்றாண்டு.

ம், புன் முறுவலும் சித்திரங்களின் அழகை மேம்
. இக்கேரளபாணியில் சமீப காலத்து

இராசா இரவிவர்மா தீட்டியுள்ள சிறந்த ஓவியங்களும் அக்கால ஓவியங்களுள் பாராட்டப்பெறுவன.

இரவிவர்மாவின் முகத்தோற்றங்கள் சிறப்புறும் ஒரே பாவனையில் சமீபகாலத்தைக் காட்டுவன. இவற்றுள், இரவி வர்மா அவர்கள் தஞ்சை அரசியார் மாதுஸ்ரீ காமாட்சி அம்பா பாயி சாகிபா அவர்களுக்கு தன் அன்பளிப்பாகத் தீட்டியளித்த யசோதை — கிருஷ்ண — ஓவியம் ஒரு சான்றாகும். இன்னும் இதனை தஞ்சை சீனியர் பிரின்ஸ் அவர்களின் மாளிகையில் காண்பதாகும். —(படம் 203-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்நாட்டு ஓவியம் ஓர் உயிர்க்கலையாகும். ஓவிய உணர்வினர் இதனை உலகப் பெருநிதியங்களாகப் போற்று கின்றனர். பௌத்த அசந்தாவின் சித்திர முறைகள். தட்சணமிருந்து இலங்கை சிகிரியாவரை சென்றிடினும், உள் நாட்டிற்குட்புகாமலே தென்னாட்டுச் சிற்பமுறை தனித்தியங்கு கின்றதென்பது கலைஞரது கருத்து. தமிழ்க்கலைஞன் கடவுளின் பெருமையையும், தெய்வீகத்தையும் உருவப் படுத்தி அவைகளை மக்களுள்ளத்தில் பதியவைக்கின்றான். மற்ற நாட்டினவை போலும் இவை மிக அழகுத் தன்மைக் காக மட்டுமல்ல. சிந்தனை தோய்ந்த இச்சித்திரங்களும் சிற்பப் பொருள்களும் தமிழ்க் கலைஞரின் தனிப் பண்பாகும். கலைஞருடைய உன்னத நம்பிக்கையும் அன்பும், தெய்வ பக்தி உணர்ச்சியுமே இவற்றை அமைத்தன. இவை, கால வேகத் தில் வறட்சி பெற, நமது சமீப கலைப் பண்புகளும் உயிரற்றவை யாயின. அவைகளை மீண்டும் பெறுவதற்கு வழி, அவ்வுணர்ச் சிகளைப் பெற அன்பையும் பக்தியையும் வளர்க்க வேண்டு வதுதான். அவைகளால் இறைவனை அணுகவும், தமிழனின் இதயம் மக்கள்பால் ததும்பவும், கலை மறுமலர்ச்சியடைந்து நமது பழம் பெருங்கலை வாழவும் நினைப்போமாக.

சிந்தனைக்குரிய சில நூல்கள் :—

1. நந்தலால் போஸ் — ஓவியக்கலை — மொழிபெயர்ப்பு — அ. பெருமாள், 1956.
2. P. கோதண்டராம்—பாண்டிச்சேரி அரவிந்த ஆசிரமம், இந்திய ஓவியக்கலை, மற்றும் பலவும்.

சங்க அகத்துறைப் பாடல்களில் பாத்திரப் பண்போவியம்.

திருமதி சாலினி இளந்திரையன், எம். ஏ., எம். லிட்., டிப்-யூ.என்.அய்.யூ.

களவியல் கற்பியல் என்னும் இரண்டு பிரிவுகளாக அமைந்த அகப்பொருள் இலக்கியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் அய்ந்து திணைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு திணைக்கும் உரிய ஒழுக்கம் அவ்வத்திணை பாடல்களில் இடம்பெறும் நிலத் திணை, இயங்குதிணை உயிர்கள் அந்தந்தத் திணைகளில் நிகழ்ச்சிகள் நடைபெறும் காலங்கள், அவ்வத்திணையில் கூற்று நிகழ்த்துவதற்கு உரியவர்கள் என்பன போன்ற பல கூறுகளும் வரையறுத்துத் திட்டஞ் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய வரையறைக்குள் பாடல் இசைத்தவர்களின் கவிதையில் தனித் தன்மைக்கு இடம் இருக்க முடியுமா? என்னும் வினா எழுவது இயல்பே.

சங்க அகத்துறைப் பாடல்களை ஆழ்ந்து நோக்கும் போது, இந்த அய்யத்துக்கு இடமில்லாமற் போவதோடு, குறிப்பிட்ட சில பெரும் புலவர்கள் தவிர ஏனையோர் ஒவ்வொருவரும் தனித் தனி இயல்புகள் வாய்ந்த தலைவன் தலைவியரை மட்டுமே தங்கள் பாடல்களில் சித்தரித்துள்ளார்கள் என்னும் எண்ணமும் உண்டாகிறது.

வாழ்வின் முக்கியமான சிக்கல்களில் ஒருவர் செயற்படும் முறைதான் அவருடைய பண்புநலனைத் தெளிவாக உணர்த்த வல்லது. எனவே, அக்காலத் தமிழ்ச் சமுதாயத்தில் மிகுதியாக நிலவிய பரத்தைமை[1]யைப் பொறுத்த வரையில் தலைவன், தலைவி முதலியோர் நடந்து கொண்ட முறையே அவர்களுடைய வாழ்க்கையின் தனித்தன்மையைக் காட்டும் என்ற கருத்தில், அந்த நிகழ்ச்சியோடு தொடர்புடைய மருதத்திணையில் கணிச

1. டாக்டர் வ. சுப. மாணிக்கம். *தமிழ்க்காதல்* (1962), பக்கம் 280.

மான அளவு பாடல்கள் இசைத்துள்ள சில புலவர் பெரு மக்களைக் கொண்டே இந்த ஆய்வு நிகழ்த்தப்படுகிறது.

அள்ளூர் நன்முல்லையாரின் மருதப் பாடல்களில் சித்தரிக்கப்படும் தலைவனும் பரத்தைமை ஒழுக்கம் உடையவனே. அதைக் காரணமாகக் கொண்டு தலைவி ஊடுதலும் வாயில் மறுத்தலுமாகிய நிகழ்ச்சிகளில் இத் தலைவியின் தனி இயல்பு புலப்படுகிறது... "சிறியிலை நெருஞ்சிக் கட்குஇன் புதுமலர் முள் பயந்தாங்கு, இனிய செய்த நம் காதலர் இன்னு செய்தல் நோம் என் நெஞ்சே." என்று தலைவனின் பரத்தைமை கண்டு[2] வியப்பும் வேதனையும் அடைகிருள் இவள். தன்னிடம் ஒருகாலத்தில் மிகுந்த அன்பு காட்டியவன் என்பதால், அவனை வெறுத்துக் கடிந்துகொள்ள முடியாத அவளு டைய மனநிலை இப்பாடலில் நன்கு வெளிப்படு கிறது. பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனை வேதனை யோடு ஏற்றுக்கொள்ளும் போது, "அவர் நமக்கு அன்னையும் அத்தனும் அல்லரோ, தோழி? புலவி அஃது எவனோ, அன்பிலங்கடையே?" என்று அவள் சொல்வதிலும்[3] தன்னைத் தானே நொந்துகொள்வது போன்ற ஓர் உள்முகக் குமுறலே வெளிப்படுகிறது.

தவிர, இவ் இருவரிடையேயும் உள்ள உறவுச் சிதைவைச் சீர்செய்யும் பொருட்டுத் தோழி தலையிட் வில்லை என்பதும் இவர்கள் இருவரும் தங்களுக் குள்ளேயே இணங்கிப் போய்விடக் கூடிய அன்பான காதலர்கள் என்பதையே காட்டுகிறது.

வேறு ஒருத்தியோடு வதுவை அயர்ந்த நிலையிலும் இவள்பாலுள்ள அன்பை இவள் தலைவன் விட்டுவிட வில்லை.[4] அவன் தன்னை விட்டுப் பிரிய மாட்டான் என்று உணர்ந்த தலைவி, "என் ஒண்தொடி நெகிழினும் நெகிழ்க; சென்றீ பெரும, நின் தகைக்குநர் யாரே"

2. குறுந்தொகை: 202; 3. குறுந்தொகை: 93.
4. அகநானூறு : 46;

என்று கூறுவது "செல்லாக் காலத்துச் செல்கென விடுத்தல்" என்னும் இலக்கணத்ததாக[5] அமைந்திருப்பதும் நோக்கத்தக்கது.

ஆலங்குடிவங்கனார் மருதத்திணையில் ஆறு பாடல்கள் பாடியுள்ளார்.[6] இவ் ஆறு பாடல்களும் பரத்தைக் கூற்று, தோழி (வாயில் மறுத்த) கூற்று என்னும் இரண்டே நிலையில் அடங்குகின்றன.

இப்பாடல்களில் கூற்று நிகழ்த்தும் பரத்தை, தலைவன் தனது தலைவியை விட இவளிடமே ஈடுபாடு கொண்டவன் என்னும் துணிவோடு பேசுகிறாள்.[7] தலைவன் இவளிடம் மிகுந்த அன்பு உடையவனாகக் காட்டிக் கொண்டு, தன் மனைவியிடம் போகும்போது அப்படி எதுவும் இல்லாதவன் போல நடந்து கொள்ளுவதாலேயே தலைவி தன்னைப் பழிக்கிறாள் என்று அவனை உரிமையோடு கடிகிறாள் இவள். "ஊரன் எம்மில் பெருமொழி கூறித், தம்மில் கையும் காலும் தூக்கத் தூக்கும் ஆடி (யிற்)ப் பாவை போல மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே" என்னும் இச்செய்தி[8] அவன்பால் இவள் கொண்டாடிய உரிமையை விளக்குகிறது. "மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து அறம்கெட அறியாதாங்கு, சிறந்த கேண்மையோடு அளைஇ நீயே கெடு அறியாய் என் நெஞ்சத்தானே" என்று பரத்தை தலைவனிடம் கூறும் பகுதியில்[9] அவளுக்கு அவனிடம் இருந்த ஈடுபாடு புலப்படுகிறது.

இவருடைய மற்ற மூன்று பாடல்களிலும் (தோழி கூற்றாக) வரும் செய்திகள், பரத்தைக்கு இந்த அளவு உரிமை ஏற்படக் காரணமாக இருந்தது, தலைவன் (தலைவியை விடப்) பரத்தையை மிகுதியாக விரும்பியதே என்பதை விளக்குகின்றன. தலைவன் தன் தலைவியிடம்

---

5. தொல்காப்பியம் : கற்பியல், 6; 6 குறுந்தொகை : 8, 45; நற்றிணை : 230, 330, 400; அகநானூறு : 106; 7. அகநானூறு : 106; 8. குறுந்தொகை : 8; 9. நற்றிணை : 400;

வருவதே இல்லை,[10] பரத்தையரை மணந்துகொள்ளத் தலைவன் முயல்கிறான்,[11] தன் தலைவனைக் கண்டிக்க முடியாமலும் விட முடியாமலும் தலைவி ஏங்குகிறாள்[12] என்னும் உண்மைகள் இப்பாடல்களில் வருகின்றன. தலைவியின் இந்நிலைக்கு இரங்கி, "தெறுவது அம்ம இத் திணைப் பிறத்தல்லே" என்று தோழி வருந்தும் நிகழ்ச்சியும் இவற்றுள் ஒரு பாடலில்[13] இடம் பெறுகிறது.

இந்த ஆறு பாடல்களையும் ஒருங்கு வைத்துப் பார்க்கையில், அளவு மீறிய பரத்தை ஒழுக்கமுடைய ஒரு தலைவன், அவனைத் தடுத்துத் திருத்தமுடியாத ஒரு மனைவி, அவளுடைய நிலைக்காக வருந்தும் ஒரு தோழி ஆகியோரைக் கொண்ட ஒரு குடும்பத்தின் சித்திரமே நமக்குக் கிடைக்கிறது.

ஓரம்போகியார் சித்தரிக்கும் தலைவன் சற்றே வேறு பட்டவனாக உள்ளான். "நும்மோர் அன்னோர் மாட்டும் இன்ன பொய்யொடு மிடைந்தவை தோன்றின் மெய் யாண்டு உளதோ, இவ் உலகத்தானே?" என்று தோழி தலைவனைக் கடிந்து கொள்ளும்போது[14] அவனைத் திருத்தி விடலாம் என்ற நம்பிக்கை அவளுக்கு இருப்பது விளங்குகிறது

தலைவனுக்கு இவ்விதம் அறிவுரை கூறிய தோழி, "பரத்தமை தாங்கலோ இலன் என வறிது நீ புலத்தல் ஒல்லுமோ?" என்று[15] தலைவியையும் அறிவுறுத்துகிறாள். தலைவன் பரத்தமை ஒழுக்கமுடையவனானாலும், தலைவி அவனை வெறுத்துவிடாமல் இருந்தால் அவனை நல்வழிப்படுத்திவிடலாம் என்று தோழி நம்புகிறாள் என்பது இங்கே புலனாகிறது. இந்த அறிவுரையால் தெளிவடைந்த தலைவி, தம் தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தை அவனிடமே குறிப்பிட்டு நகையாடும்போதும்[16] "குறுந்தொடி மகளிர் நலனுண்டு துறத்தியாயின் மிக நன்று, அம்ம, மகிழ்ந, நின்சூளே"

---

10. நற்றிணை : 230; 11. நற்றிணை : 330;
12, 13. குறுந்தொகை : 45; 14. அகநானூறு : 286.
15. அகநானூறு: 316; 16. நற்றிணை: 20;

என்று தலைவனிடம் தோழி நகையாடும்போதும்[17] அவன் திருத்தப்படக்கூடியவன் என்பதில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை வெளிப்படுகிறது இத் தலைவன் தன் தலைணியின் பாலும் மிகுந்த காதல் உடையவனே என்பது, "இனையள் என்று அவட் புனையளவு அறியேன்" என்று அவன் தலைவியின் நலம் பாராட்டுவதிலும் [18] தெளிவாகிறது.

ஓரம்போகியார் பாடிய ஐங்குறுநூற்றிலும், இதே குடும்பநிலை வருணிக்கப்படுகிறது. இதன் முதற்பாடலே, "புறத்தொழுக்கத்திலே நெடுநாளாய் ஒழுகி, இது தகாது எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு தலைவி யோடு கூடி ஒழுகா நின்ற தலைமகன், தோழியோடு சொல்லாடி, யான் அவ்வாறு ஒழுக நீயிர் நினைத்த திறம் யாது என்றாற்கு அவள் சொல்லியது" என்னும் குறிப் புடன்தான் தொடங்குகிறது.

அவ்வையாரின் மருதப்பாடல்களில் உருவாகும் தலைவன் மிகுகாமம் உடையவனாகவும் தலைவியை அடியோடு புறக்கணிப்பவனாகவும் காணப்படுகிறான். "ஊரன் பெண்டினை ஆயின் பலவாகுக நின் நெஞ்சிற் படரே...சில்வாகுக நீ துஞ்சும் நாளே". என்று தனக்குத் தானே சொல்லிக்கொள்கிறாள்[19] இத்தலைவி. இதற்குக் காரணம், அவன் இல்லாமல் அவளால் வாழ முடிய வில்லை. "வன்கண் சூழ்ச்சியும் வேண்டுமால் சிறிதே" என்று ஒரு தோழி சொன்னது[20] போன்ற திறன் இல்லா தவள் இத்தலைவி இதுவே, தலைவன் தான் நினைத்த படிச் செல்ல வசதியாயிற்று

அவனால் விரும்பப்பட்ட ஒரு பரத்தை, "நானும் அவனும் புதுப்புனலாடப் போகிறோம்; முடிந்தால் அவன் மனைவி தன் ஆட்களோடு வந்து அவனை (என்னோடு வாராமல்) தடுத்து விடட்டும் பார்ப்போம்" என்று[21] அறைகூவல் விடுகிறாள். அவனுடைய இற்பரத்தையும்; அவனுக்கு மற்றவர்களைவிடத்

17. குறுந்தொகை; 370; 18. குறுந்தொகை; 70;
19. குறுந்தொகை 91; 20. குறுந்தொகை: 73;
21. குறுந்தொகை: 80;

தன்னிடமே அன்பு மிகுதி என்று உரிமை கொண்டாடுகிருள்.[22] பரத்தை கூற்ருக வரும் மற்ெருரு பாடல், அழகிய புதியவள் ஒருத்தியைக் கண்டால் பழைய பரத்தையரை எல்லாம் கைவிட்டு அவளைத் தலைவன் சேர்த்துக் கொள்ளுவான் என்று[23] வெளிப்படையாகவே பேசுகிறது ..

நக்கீரனாரின் மருதப் பாடல்களில் சித்தரிக்கப்படும் தலைவன் தலைவியர் சற்றேறக் குறைய அள்ளூர் நன்முல்லையாரின் பாடலில் வருபவர்களைப் போன்றவர்களே. பரத்தை ஒழுக்கமுடைய இவன் தன் தலைவியிடமும் நெகிழ்ந்த நெஞ்சம் உடையவனாக இருக்கின்ருன்.

இவன் வேறு ஒருத்தியிடம் தொடர்புகொண்டிருந்த செய்தி ஊரெல்லாம் பரவித் தலைவிக்கும் தெரிந்துவிடுகிறது.[24] ஆனாலும், பரத்தையிற் பிரிந்து வந்த அவனிடம், 'புல்லேன் பெரும, புலத்தலும் இல்லேன்... வாணன் சிறுகுடி யன்ன என் கோல்நேர் எவ்வளை நெகிழ்த்த நும்மே''[25] என்று கூறுகிருள். அதாவது, கடவுட் கற்புடையவர்களாகக் கூறப்படும் தலைவியர் போல, அவன் செய்த துன்பத்தை இவள் தன் அகத்தே ஒளித்துக்கொள்ளவில்லை. ஆயினும், (தவறு செய்தவனாயினும்), தன்னிடம் அன்புடையவன் என்பதால்[26] அவனை அவளால் வெறுத்துவிடவும் முடியவில்லை

இத்திணையில் மிக அதிகமான பாடல்களைப் பாடிய பரணரின் பாடல்கள் அனைத்தையும் (25) வரிசைப் படுத்திப் பார்த்தால், அருமையானதொரு குடும்ப நாவலே உருவாகி விடும்போல் தோன்றுகிறது. இத் தலைவன் புதுப்புதிய பரத்தைகளை நாடும் இயல்பு உடையவன் என்பது தலைவி,[27] தோழி,[28] பரத்தை[29] முதலிய பலர் கூற்ருலும் உறுதிப்படுகிறது. ஆயினும்,

22. குறுந்தொகை 364; 23. நற்றிணை: 290; 24. அகநானூறு: 36, 346; 25. நற்றிணை: 340; 26. அகநானூறு: 126. 27. அகநானூறு: 6, 196, 266. 386; 28. அகநானூறு ;116, 226, 246, 326; குறுந்தொகை: 89, 258; நற்றிணை: 310; 29. அகநானூறு: 186, 376, 396

தன்னுடைய பரத்தைமை ஒழுக்கம் தன் தலைவிக்குத் தெரிந்துவிடக் கூடாது என்றே இவன் எண்ணி வந்துள்ளான் என்பது பரத்தை கூற்றாக அமைந்த ஒரு பாடலின் மூலம் வெளிப்படுகிறது.[30]

இவனுடைய தலைவியும் முதலில் இவனது பரத்தைமை ஒழுக்கம் காரணமாக இவனை அடியோடு வெறுத்தாள். "பரத்தையைத் தழுவிய உன் மார்பைத் தீண்டமாட்டேன், கிட்ட வராதே." என்று[31] அருவருத்தாள்; நீ என் மகனின் தாய் அல்லவா? நம் உறவு விட்டுப் போகுமா? என்று கூறி அவளை ஆற்றுவிக்க அவன் முயன்ற போதும், "மாசில் கற்பின் புதல்வன் தாய் என மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றி எம் முதுமை எள்ளல்." என்று[32] சீறினாள். இவளுடைய தோழியும், தலைவி தாயாகி விட்டதாலும் அழகு குன்றி விட்டதாலுமே அவன் அவளை வெறுத்துவிட்டான் என்ற குறிப்பைப் புலப்படுத்திக் கசந்தாள்.[33]

ஆனால், (அவன் தலைவியிடம் அன்புடையவன் என்பதையும் தன் பரத்தை ஒழுக்கத்தைக் கைவிடவே விரும்புகிறான் என்பதையும் அறிந்ததனால் போலும்) பின்னர், தோழியும் தலைவியும் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ளுகிறார்கள்: "அவன் நம்மைப் புறக்கணித்தாலும் அவனை நாம் விட்டுவிடக்கூடாது என்று[34] தலைவிக்குச் சொல்லும் தோழி, "தலைவனின் நடத்தையை இடித்துரைக்க எங்கள் தலைவிக்கு உரிமை உண்டு. அதைக் கேட்க ஊராருக்கு உரிமை இல்லை" என்று பரத்தையருக்கு எச்சரிக்கை விடுக்கிறாள்[35] இவற்றால் தெளிவு பெற்ற தலைவி, தலைவன் ஆற்றாமை வாயிலாகத் தன்னிடம் வந்தபோது அவனை ஏற்றுக்கொள்கிறாள். ஏற்றுக்கொண்டதோடு, என் கணவனை உரிய சமயத்தில் ஏற்றுக்கொண்டதன் மூலம் ஆதிமந்திபோலக் கணவனை இழந்து துன்புறும் வேதனையிலிருந்து தப்பினேன் என்றும் மகிழ்கிறாள்.[36]

---

30. நற்றிணை. 100; 31. அகநானூறு 196; 32 அகநானூறு 6; 33 அகநானூறு: 326; 34 அகநானூறு 356; 35. குறுந்தொகை. 89; 36. அகநானூறு: 236;

இந்த இன்ப முடிவுக் கதையின் இடையே ஓரிடத்தில், இனி நான் உன்னை விடவே மாட்டேன்! ஏனெனில் "நின் மனையோள் (நின்னை) வவ்வலும் அஞ்சுவல்" என்று பரத்தை கூறிய செய்தி,[37] அவன் பரத்தைமை ஒழுக்கத்தை விட்டுத் தன் மனைவியிடமே நிலையாக வாழக்கூடும் என்பதை முன்பே குறிப்பாக உணர்த்திற்று. அதன்படியே அவன் தன் தலைவியிடம் சென்று சேர்ந்துவிட்டான்.

தொகை நூல்களில் உள்ள பாடல் (எண்) வரிசையை மாற்றி, இப்படி ஒரு குடும்ப நிகழ்ச்சிக் கோவையாக ஒவ்வொரு புலவரின் பாடலையும் அமைத்துப் பார்ப்பது சுவையாக இருந்தாலும், இப் புலவர்கள் தங்களின் ஒருணர்ச்சித் தனிப்பாடல்களை இத்தகைய வெவ்வேறு இயல்புகள் வாய்ந்த தலைவன் தலைவியரின் குடும்ப வாழ்வுத் தொடர்களாகக் கருதி யிருப்பார்களா? என்னும் ஐயம் எழுவதும் இயல்பே. ஆயினும்; "ஒரு சிலர் வாழ்க்கையில் மெய்யாகவே நிகழ்ந்த காதற்பான்மைகளைப் புலவன் கண்டிருப்பான். அக்காட்சியும் கேள்வியும் சில பாடல்களை இயற்றத் தூண்டியிருக்கும்" என்று டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் கூறியிருப்பதும் கவனிக்கத் தக்கது. (தமிழ்க் காதல், பக்கம் 209). புலவர்களும் ஆசிரியர்களும் தமக்குப் பழக்கமான, தம்மை மிகுதியாகக் கவர்ந்த சில இயல்புடையவர்களை நினைவிற் கொண்டே தங்கள் படைப்புக்களைச் செய்வதும் புதுமை அன்று. இப்புலவர் களும் தாங்கள் கண்டு கேட்டு அறிந்த வாழ்க்கைச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டே தங்கள் பாடல் களை யாத்திருக்கலாம் என்னும் எண்ணத்தை எழுப்பி, அதன் மூலம், தமிழ் இலக்கிய ஆய்வில் ஒரு புதிய பார்வையை ஏற்படுத்த முடியுமா என்பதை அறிவதற் காகவே இச்சிறிய ஆய்வு நிகழ்த்தப்பெற்றது....

(அனைத்து இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் முதலாவது கருத்தரங்கில் (1—6—69) படித்த ஆய்வுரை)

---

37. அகநானூறு: 396.

மனுநீதிச் சோழன்

திரு. புலவர். E. ஆளவந்தார். பொன்மலை

மனுநீதிச் சோழன் என்று பெயர்பெற்ற மாண்புமிகு சோழன் வரலாறே இது. அவன் மனுநீதிச் சோழ-னல்லன். மனுநீதிச் சோழனே என்று நிலைநாட்ட முயல்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

நீதியென்பது அறம், அறமாவது நடுநிலை பிறழா நல்லியல்பு. அறத்திற்கு மறுதலையாய பல அழிவு சக்திகள் எழக்கூடும், ஆனால் முடிவில் வெற்றிபெறுவது அறமே (Virtue may be assailed, but never hurt) மேலும் ஆக்க சக்தியை அழிவு சக்தி வென்றதாக யாண்டும் கண்டிலேம். (The positive always overcomes the negative) சாத்தான் எவ்வளவுதான் எதிர்த்து நிற்பினும் இறைவனை வெல்ல முடியுமா? இது ஒரு சமுதாயத்திற்கும் தனி மனிதனுக்கும் பொருந்தியதாகும்.

இனிப் பெரிய புராண அடிகளை நோக்குவோம்.

> 'தனிப்பெருந்தருமம் ஓர் தயாவின்றித்தானை மன்னன்
> பனிப்பில் சிந்தையினில் உண்மைப்பான்மை
> —சோதித்தால் என்ன'

என்பது சேக்கிழாரது சிறந்த வாக்கு. சமய அடிப்படை சரியாது புரட்சிக் கருத்துக்களைக் குறிப்பாக அமைத்துச் செல்வது சேக்கிழார் மரபு. புதிய கருத்துக்கள் கருக்கொண்ட காலம். ஆனால், அதனை உருக்கொடுத்து வெளியிடக்கூடாத சூழ்நிலை அமைந்திருந்தது. ஈண்டுச் சோழன் மனுநீதியைப் பின்பற்றுகிறானா அல்லனா என்பது சோதனையன்று. மேலும் இவனொருவனே மனுநீதிச் சோழனென்னில் மற்றைய மன்னர் அந்நீதியைப் பின்பற்றிலர் என்ற இழுக்கும் நேரக்கூடுமன்றோ? அறம் நிறைந்த தமிழரசர் மரபிற்றோன்றிய சோழன் நெஞ்சம், தன்னை வஞ்சித்து அமைச்சர் அறிவுரை என்ற போர்வையால் தன்னலத்தை மறைத்து, மைந்தனை இழக்கத் துணிவின்றி அறத்தைக் கைவிடத் துணிவனோ என்று பார்ப்பதே யாகும். அவன்

நெஞ்சில் ஊன்றி நிற்கும் அறத்தை ஆட்டிப்பார்க்கிறது அறம். 'ஓர் தயாவின்றி' என்பதால் சிறிதும் இரக்க மற்ற முறையில் சோதிக்கிறது எனலாம். ஆகவே சோதனை எந்த நீதிநூலைப் பின்பற்றுகிறுன் என்ப தன்று. மன்னன் மனதில் நிறைந்துள்ள அற நினைவு உறுதியுடையதா எந்த அளவுக்கு உறுதியுடையது என்பதே அறக்கடவுள் காண விரும்பியது.

கொற்றக்குமரன் மேல் குற்றமில்லையென்பதற்குச் சேக்கிழார் மூன்று காரணம் காட்டுகிறுர், 1. அது புனிற்றிளங் கன்றுதலின் குறிக்கோளின்றித் துள்ளி யோடும் இயல்புடையது. 2. தேர் செல்வது சந்து, பொந்து அல்ல அரசப் பெருவீதி 3. 'மன்னிளங் குமரர் சூழச் சென்ற மன்னன் மகன், கவனியாததுமட்டு மன்று, 'மனித்தர் தன் வரவு காணுவண்ணம்' என்பதால் வேறு யாரும் காணவில்லை. துண்ணெனக் குறுக்கே பாய்ந்தோடித் துள்ளியது. தெருவின் நெடுகில் சற்று ஓடிவந்திருப்பினும் யாரேனும் கண்டு தேரை நிறுத்தச் சொல்லியிருப்பர், 'மறுகினூடே' என்பதால் தெருவின் குறுக்கே பாய்ந்தமை தெளிவாம். காவலன் மகன்மேற் கவனக் குறைவை ஏற்ற விரும்பாத சேக்கிழார் 'செம் பொனின் தேர்க்கால்மீது விசையினுல் செல்லப்பட்டே உம்பரின் அடைந்தது' என்று கன்றின் இயல்பாகப் பொன்றியதே யன்றிக் காவலன் மகன் கருத்தின்றிக் கொன்றுன் அன்று என்று கூறியருளினுர்.

ஆகவே யார் மீதும் குற்றமில்லை, அறமே செயற் கையாய் ஏற்படுத்திய இடையூறு விளைவைக் காண விழைகின்றது அறம்.

கன்றை யிழந்து கதறும் ஆன் படும்பாட்டை தேரி னின்றிறங்கித் தெரியக் காண்கிறுன் மன்னன் மகன். தற்செயலாக நேர்ந்ததற்குத் தன்னையே நொந்து கொள்கிறுன். அரசன் அறியாமுன்னம் தன்னுல் ஆட்சிக்கு நேர்ந்த பழியைப் போக்க வழிவகையை ஆய்கிறுன் அந்தணர்களை அணுகுகிறுன், வீதிவிடங்கன். இவ்வாறு விடமுண்டவனைப் போல வீதியில் நின்று

திகைக்கையில் ஆன்முந்திச் சென்று செய்தியறிவிக்கின்றது. மன்னவன் கோயில்வாயில் வரை சென்று அணிமணியைத் தன் கோட்டிஞல் அடிக்கின்றது.

மணியோசை சேக்கிழார் செவிக்கு மூன்று வகையாகப் பிரிந்து ஒலிக்கின்றது. செங்கோலாட்சிக்கு நேர்ந்த பழியைப் பறைசாற்றும் முழக்கமென்றும் துய்த்தே தீர்க்கவேண்டிய பாவம் பற்றவரும் ஓசையென்றும், மைந்தன் ஆவிகொளவரும் எமன் ஊர்தியாகிய எருமையின் கழுத்துமணி யோசையென்றும் வகுத்துக் காட்டுகிருர். எனவே இம்மையில் உலகோராற் கூறப்படும் பழியையும், மறுமையில் அனுபவிக்கவேண்டிய பாவத்தின் பயனையும் துடைக்க விரும்பிஞல் மூன்ருவதாக நின்ற எமனுக்குத் தன் மகனை இரையாக்கவேண்டும். ஆகவே மூன்ருவதைக் காக்க வேண்டி முன்னிரண்டையும் ஏற்கவேண்டும். இன்றேல் மகனை இழந்தேனும் இரண்டையும் துடைக்க வேண்டும். இதுவே சோழனுக்கு நேர்ந்த சோதனை.

மந்திரிகளே மறையோராதலிஞலும், மறை கூறும் முறைகளை முழுதுணர்ந்தோராதலிஞலும் 'கோவதை செய்தார்க்கு மறை அந்தணர்கள் விதித்த முறை வழி நிறுத்தல் அறமென்ருர்' அமைச்சர்கள், மறையந்தணர்கள் விதித்த முறையே தமிழரசர் தழுவத்தக்க-வள்ளுவர் தெள்ளிதின் உணர்த்திய-அறமென்றும் மன்னன் மனதைக் குழப்புகின்றனர். அவன் அது மறையோர் மரபென்று உணராது, தனது மைந்தன் மடியக்கூடாது என்ற கண்ணேட்டத்தாற் கூறுவதாகக் கருதுகிருன். அவனது வாய் வாளாமையே, தம் கருத்துக்கு இசைந்து வருவதாகக் கருதிய அமைச்சர் கூறியவற்றையே மீண்டும் கூறுகின்றனர். அரசனது முகம், தீயிடை தோய்ந்த செவ்வண்ணக் கமலம்போல் சினந்துரைக்கச் செய்கின்றனர். அதுவே வழக்கமென்றும் வாதாடுகின்றனர். மன்னன் மறையோர் கூறிய முறையைச் சழக்கென்று ஒதுக்கித்தன் மனதில் தோன்றிய நடுவு நிலையே அறமென்ற முடிவுக்கு வருகிருன். அவ்வறமாவது

ஆவின் துயரை அகற்றமாட்டாத தானும் அத்துயரைத் தாங்குவதேயாகுமெனத் துணிகிறான்.

ஒரு குலத்துக்கு ஒரு நீதியுரைக்கும் மனு நீதியையும் மன்னர்க்கு நீதி ஒருவகை, மக்கட்கு நீதி மற்றொருவகை என்று சொன்ன வியாழ நீதியையும் தன் மனத்திற்குப் பொருந்தாமையால் கடிந்துரைத்துத் தன் தூய மனச் சான்று கூறுவதையே அறமெனக் கொண்டான். தகுதியென ஒன்றே நன்று என்றுணர்ந்து பகுதிதோறும் வழுவாது பட்டொழுகுகிறான் அவன் பின்பற்றிய தனி அறநெறி சேக்கிழார் காலத்திற்கு முன்னரே அவன்பெயரால் மனுவினது நீதி என வழங்கப் பெற்றிருத்தல் வேண்டும். அவனது இயற் பெயர் மனுவோ அன்றி வேறெதுவோ என்றறியக்கூடாதவாறு இரட்டடிப்புச் செய்யப் பெற்றுள்ளது. எவ்வாறாயினும் மனுநீதி அச்சோழ மன்னன் பின்பற்றிய அறநெறியாகிய திருவள்ளுவர் கூறும் நீதியே என்பதும் பண்டைய மனுவின் நீதியை யுணர்த்தாதென்பதும் தேற்றம். ஆன்றோர் செய்த அருஞ் செயலை ஏனையோர் மேலும் ஏற்றியுரைப்பது சிலர் வழக்கம். அவ்வாறே மனுநீதிக்கு ஏற்றம் கற்பிப்பதற்காகச் சிலர் செய்த புன் செயலிது என்பது போதரும்.

அரச குமாரன் தன்மேற் பழி சாராதவாறு முன் சேக்கிழார் கூறிய மூன்று காரணங்களால் எளிதாக விலக்கியிருக்கலாம். ஆனால் இயற்கையில் நேர்ந்த இடையூற்றைத் தன்பால் ஏற்று அதற்குரிய கழுவாயைத் தேட முனைந்தது அவனது பண்பை விளக்கும் அரசன் ஆணை பெற்ற அமைச்சன் தன்னைக் கொல்ல வருமளவும் குமரன் அத்தெருவிலேயே திகைத்து நின்றிருக்க வேண்டும். தனக்கு நேரக்கூடிய முடிவை நன்குணர்ந்தும் தவப் புதல்வன் உயிர்த்தப்ப எண்ணவில்லை. குற்றமற்றவன் என்று தன்னாற் கருதப்பட்ட குமரனைக் கொல்ல இசையாமையும் அதேசமயம் கடமை துறத்தற் கஞ்சி காதலுயிரைத் துறக்கத் துணிந்தமையும் அமைச்சனது ஆட்சியிடத்துள்ள அன்பு (Lolayalty) புலனும்.

மனநீதி என்பது மனுநீதி என்பது எளிதாக மாற்றக்கூடியதே. அறிஞர் முடிவு செய்க.

கவிஞனின் உலகம்

திரு. வித்துவான். **சொ. சிங்காரவேலன்**, எம்.ஏ., டிப்.லிங்.
அ. வ. அ. கல்லூரி, மாயூரம்.

பிறப்பு:

மனத்தின் ஆழத்தில் கிடக்கும் உணர்ச்சி பீறிட்டெழும்போது கவிஞனுக்கு அழகிய கவிதை தோன்றுகின்றது; அவனை யறியாது ஒலிநயம் துணைக்கு வருகின்றது; கற்பனை ஒளி காட்டுகின்றது; சொற்கள் பாய்கின்றன. சொல்லோவியமான அழகுக் கவிதை இப்படித்தான் பிறக்கின்றது.

ஒளிவெள்ளம்:

காலையிலே தோன்றும் ஒளிவெள்ளத்தைத் தன் இரு கண்களாற் காண்கின்றான் கவிஞன். அகக்கண்ணாலும் அந்த அமுதத்தைக்கண்டு இன்பம் எய்துகின்றான். அவனது உதடுகள் அசைகின்றன;

"கவிந்த இருளில் மத்திட்டுக்
காலைவரையிற் கடைந்ததனால்
குவிந்து திரண்ட வெண்ணெயெனக்
கொள்ளை ஒளியைக் காணம்மா"
"காலைமலரக் கண்மலரும்
காவின் முகிழ்ந்த முகையூடே
சாலம் புரியும் ஒளிக்கதிரைச்
சற்றே எழுந்து பாரம்மா"—1.

ஒளியை அமுத வெண்ணெயால் அனுபவிக்கின்றது அவன் உள்ளம். ஒளிக்கதிர் அரும்புகளின் மீது பட்டுத் தெறிக்கும்போது, அந்த வண்ணக்கலவை அவனுக்கு ஆரா இன்பமாக அன்றோ தோன்றுகின்றது. குழந்தையுள்ளத்தின் குரலாய் – இயற்கைத் தெய்வத்தின் இதயக் குரலாய் நிமிர்கிறது அவன் குரல்.

காலையழகு இப்படியென்றால் மாலையழகு அவன் மனத்தைக் கிறுக்குகின்றது. வானவீதியை அண்ணாந்து

நோக்குகின்ருன். நீலம் மெழுகிய வீதியாம் அது; விண்மீன்களாகிய பூக்களைச் சொரிந்து அழகுபடுத்தி யிருக்கிருர்களாம்.

"நீலம் மெழுகிய வீதியிலே மணி
நித்திலப்பூச் சொரிந்தே
கோலமதிவரும் போதொரு செய்தியைக்
கூட்டி யனுப்பிடலாம்"—2.

புறவுலகுப் போக்கு:

இயற்கையில் ஆழ்ந்து ஒரேயடியாக மூழ்கிவிடாமற் புறவுலகையும் கவிஞன் நோக்குகின்ருன். கயமைகள், சிறுமைகள் ஆகியவற்றைக் கண்டிக்கவும், உண்மைகளை எடுத்து முழங்கவும் அவன் தவறுவதில்லை:

''ஊழெனும் ஒருவன் ஊதியகாற்றில்
உலைந்தவை யொருகோடி
ஆழும்பொருள் இதைஆவா மனிதர்
அறிந்தும் அடங்காரோ''—3

கவிஞனின் இயல்புகளைக் கவிஞன் கூறவும் தயங்குவதில்லை. பாம்பறியும் பாம்பின் கால் அன்ருே? உண்மைக் கவிஞன் எண்ணத்தில் மூழ்கி இருந்திடும் போது,

''எண்ணம் என்னும் இக்குணி வலையில்
எங்கணும் வீசி யிருமாந் திருப்பான்
சிக்கிஞல் அந்த சிறுவலை சேர்த்த
மீனே மற்றுக் கல்லோ மண்ணே
சொல்லெனுஞ் சரக்காய்ச் சொந்தமாந் தனது
உணர்வெனுந் தெருவில் உரத்துக் கூவிக்
கற்பனை விலைக்குக் கடைவிரித் திடுவான்
பெற்றதோர் இன்பம் பெரிதோ சிறிதோ
கற்றவர் நெஞ்சம் களித்துக்
கவிஞன் என்றவனைக் காதலிப்பாரே.''

தன் உணர்வில் கூவி அமுதக் கவியாக அதனை ஆக்கி யவரின் கற்பனை விலைக்குக் கடைவிரிப்பான். இன்பம்

பெரிதோ சிறிதோ என்பது பற்றி அவனுக்கு எதுவும் கவலை இல்லை. உலகியலுக்கு வழங்கவேண்டும் என்பதே அவன் குறிக்கோள். ஏற்றுக்கொள்வாரைப் பற்றி யாதும் எண்ணம் இல்லை அவனுக்கு.

நெடுமூச்சு :

உலகைக் கண்டு நெடுமூச்சு விடும் கவிஞனின் நிலையே பாட்டாகின்றது என்பதும் பாராட்டப்படத் தக்க ஒன்று,

"மண்ணில் துன்பம் கண்டு நொந்த
மாகவிக்குள் மூச்சதோ ?
பண்ணிறைந்த பாடலென்று
பாரில் இன்பம் தந்தது"—5

மன்பதையைக் கண்டு கண்ணீர் விடும் நிலை, உயர்கவிஞனின் உள்ளத்தின் சிறப்பு.

இயற்கைக் காட்சி :

கவிஞனுடைய கண்களுக்குக் கோடையும், ஓடையும், காற்றும் கொடுமைப்படுத்துவனவாகத் தோற்றுகின்றன. எப்போதும் இப்படியா ? ஏதோ மனப்பாரத்தில் துவளும்போது இந்த நினைவு வருகின்றது அவனுக்கு. பெண்ணின் குரலாக ஒலிக்கின்றது; இனிய வடிவமும், உணர்ச்சியும் என்ன அழகுடன் வெளிவருகின்றன :

"கோடையை ஏசுங்கள் கோடையை ஏசுங்கள்
வாடி வியர்த்து மயங்கவென் மங்கையை
பாடு படுத்திய தால்"

"ஓடையை ஏசுங்கள் ஓடையை ஏசுங்கள்
கோடும்புருவக் குளிர்ந்தமைக் கண்களைத்
தேடிச் சிவப்பித்த தால்"

"காற்றினை ஏசுங்கள் காற்றினை ஏசுங்கள்
சீற்றமே கொண்டென்றன் செல்வி அலைகுரல்
ஆற்றுதலைத்தத னால்"

கவிஞன் சில இரகசியங்களை அம்பலப் படுத்துவதில் நிகரற்றவன். ஆனால் அவற்றை அவன் வெளிப்படுத்துவது நாகரிகம் உடையதாக—பண்பாடு மீறாததாக இருக்கும் அவன் உணர்ச்சிப்பிண்டந்தான். ஆனால் அவ்வுணர்ச்சிக்கு உருவம் கொடுப்பதிலும் அவன் உயர்வு காணும் ஒப்பற்ற கலைஞன். உணர்வின் இனிமையை ஒழுங்குபடுத்தி, நெறிப்படுத்திக் காட்டுவதில் அவனுக்கு நிகர் அவனே.

காதல் அலைகள் :

அவன் ஒரு காதலன்; காதலியோடு கூடிக் குலவும் இளம் பருவத்தினன் தன் காதல் அலைகளை எண்ணக் கடலிலே மோதவிடுகின்றான். காதலியோடு சேர்ந்து உறவாடும்போது அவளது நாணம் அவனுக்கு வெறியூட்டுகின்றது. [7]

"ஊரும் உலகும் அறியாமல்
ஒளிந்தொரு பொழிலில் ஒன்றானோம்
சேரும் தருணம்; பிறகென்றாள்;
சிட்டுகள் பார்க்கின்றன என்றாள்"

"மேய்ந்து திரியும் அலைகண்டாள்
வெட்கி எழுந்தாள் விடைகொண்டாள்"

"சொல்லின் நிழலில் ஒளிந்தாடிச்
சுனையில் ஒன்றாய்ப் புனலாடி
மெல்லத் தழுவச் சென்றாலோ
மின்னற்சுடர் போல் நழுவிடுவாள்"

அலைகளும், சிட்டுக்களும், மீன்களும்கூடப் பார்க்கக் கூடாதாம் அவர்களது இன்ப உரையாடலை, உறவை என்றால் அவளது நாணத்தின் உயர்வினை என்னென்பது என்றுகூறி மேலும் வியக்கின்றான் அவன்.

'காதல் என்பது பூந்தென்றல் — அது
கண்ணிற் படுத லாகாதாம்
வீதி மனிதர்க் குரித்தன்று — அஃது
விண்ணோர் நுகராப் பண் என்றாள்"

வீதி மனிதரும், விண்ணோரும்கூடக் காணவியலாத அவ்வளவு நுட்பமான காதலுணர்வுடையவளாக அந்த நங்கை காட்சி தருகின்ருள்,

அந்த நினைவுகள் எல்லாம் அவன் உள்ளத்தை விட்டு அகலாமல் பசுமையாய் விளங்குகின்றன. அவற்றை மீண்டும் மீண்டும் எண்ணுகின்றபோதெல்லாம் அவனுக்கு மகிழ்ச்சி பொங்குகின்றது. காற்றில் அசைந்தாடும் தளிர்களும் இந்நினைவுகளும் அவன் மதிப்பில் ஒன்றே. [8]

"மறந்த காதல் நினைவுகள்
மகிழ்ச்சி பொங்க வந்தென
அறந்தளிர்த் தெழுந்தென
அசைந்தன அசைந்தன"

பூங்கொடியாளைச் சுமந்து அந்தப் பூபாரம் கவிப் பெருக்கால் வருகிறது காதலனுக்கு. பூவைச் சுமந்தால் வரும் இன்பமே காதலியைச் சுமந்தகணத்தில் அவன் அடைந்த அனுபவம் பாடுகின்ருன் உள்ளம் மறந்து கண்மூடிக் கவிதை யிசைக்கின்ருன் ?

"ஒன்பது செண்பகப்பூ — இவள் நிறை
ஒன்பது செண்பகப்பூ — ஒன்பதே
ஒன்பது செண்பகப்பூ"

"கைகள் நறுங்காந்தள் — கருங்
கண்களோ பூங்குவளை
நையும் இடைசுமந்த — பெரு
நகில்கள் தாமரைப்பூ"

இவ்வளவு கூறியும் அவனுக்குக் கூறிமுடித்த நிறைவு இல்லை. பின்னும் பேசுகிருன்: கனவை ஒளியை – எடையிட்டுப் பார்ப்பதில்லை. அதுபோன்று இவட்கும் நிறையில்லை. என்கிருன்.

"முல்லை நறுமணம்போல் — இவள் என்
மூச்சில் இழைந்திடுவாள்
எல்லையிலாக் கனவை — ஒளியை
எடைகள் பார்ப்பதுண்டோ"

என்னதான் கூறிக் கூறிப்பார்த்தும் காதலனின் ஆசை தணிந்தபாடில்லை. ஆசை வார்த்தைக்குள் அடங்குவதோ? தண்ணீர் எடுத்துத் திரும்பும்போது, அவளைத் தற்செயலாகக் காணவேண்டும் என்றும், மண்ணிற் பதிந்த அவள் கால் சுவட்டில் மந்திர பூசைகள் செய்ய வேண்டும் என்றும் ஏதேதோ பேசுகின்றான். பூஞ்செடிகளின் பக்கம் அவள் போந்து அவள் பறிக்கின்றபோது அந்தப் பூக்களில் ஒன்றாகத் தான் இருக்கக்கூடாதா என்ற ஆசை அவனுக்கு; தோப்பு நிழலில் அவள் தூங்கும்போது அவளைச் சுற்றிவந்து ஆரப்பாடுகிறதே தும்பி! அதுவாகத்தான் ஆகவேண்டுமாம். [10]

"பூப்பறிக்கின்ற போதினிலே — ஒரு
பூவாக உன்கையில் எட்ட வேணும்
தோப்பு நிழலிலே நீயுறங்க — ஒரு
தும்பியாய் வந்துன்னைப் பாடவேணும்"

காதலுணர்விலிருந்து விடுபட்டு விண்ணை அண்ணாந்து நோக்குகின்றான் பாவலன். ஆம்; அங்கும் அவனுக்குக் கற்பனை விருந்துதான் [11]

"வானக் கழனியிலே — ஆயிரம்
வண்ணம் படைத்திடுவான்
மோனச் சதுர்முகனும் — விதைத்த
முத்துவிதை இவையோ"

அழகுப் பசியும், உணர் வெறியும் :

கவிஞனது அழகுப்பசியும், இயற்கை வேட்கையும், உணர்வு வெறியும் சேர்ந்துவிட்டால் அங்கே கவிதைப் பெருக்கு குதிபோட்டுப் பெருகுவதைக் காண்கின்றோம். அவன் எக்காலத்தவனாயினும் சரியே. இந்த நிலைக்கு ஆட்படாதவனாக இருத்தல் என்றும் அவனுக்கு இயலாதென்றே கூறலாம். தன்னுடைய உயிர்க்கு உரம் கொடுக்க அவன் ஒலிநயத்தை, ஓசையின்பக் கவிதையை நாடினான் ஆயினும், உலகிற்கு அவன் வழங்க வேண்டியதை வழங்கிக்கொண்டுதான் இருப்பான். உலக அறி

வுடைமையும், உலகப் பொருளாதாரமும் இணைந்த ஓர் வியத்தகு அற்புத சமுதாயத்தைப் படைப்போன் அல்லனோ, அவன்! பாரதியும் பாரதிதாசனும் கண்ட சமுதாயமும், கனவுகளும் வெவ்வேறு என்றுகூற இயலாது. அவர்கள் கண்டது ஓர் உலகமே என்று கூறிவிடலாம். அவர்களுக்குப் பின்னே மறுமலர்ச்சிக் கருத்துக்களை எடுத்து வழங்கும் எல்லோரும் ஒரே போக்கிலேயே எழுதி வருகின்றார்கள். விழாக்கள் வரும்போது வார நாளிதழ்களில் அவைபற்றி எழுதிவிட்டுப் பின் என்றென்றும் ஒதுங்கிக் கொண்டுவிடும் உயர் பெருங்கவிஞர் பலரும் உள்ளார்கள் அவர்கள் குறிப்பிட்ட நாட்களில் மட்டும் வெளிவரும் குறிப்புடன் கவியெழுதத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டார்கள் எனறு கூறலாம். அவர்களால் தமிழ் இலக்கியம் புதிய பேறுகளை எய்திடும் என்று உறுதியாக உரைத்தல் முடியாது. பார்க்கப் போனால், இத்தகைய சடங்குக் கவிஞர்களில் பெரும்பாலோர் கவிதை உணர்வு நாட்டில் வற்றிப் போவதற்குக் காரணமாகிறார்கள் என்று கூறுவதிலும் தவறு இருக்க முடியாது.

பாலுணர்ச்சியா ?

புதுக் கவிதை என்ற பெயரில் சிலர் எழுதிவரும் மனக் கோணல்கள் ஒருபக்கம் நாட்டில் ஒரு சிலரால் வலிந்து புகுத்தப் பெற்றும் வருவதைக் காண்கின்றோம் இவர்களுக்கு வார்த்தைகளே வரிகள்; அங்கொன்றும் இங்கொன்றும் தென்படும் கருத்துச் சிதறல்களை கவிதைகளின் கொடுமுடிகள் என்றுகூறிக்கொள்வது இவர்கள் வழக்கு. இ வ ர் க ள் 'நடை' வெளிப்படையானதும் அன்று உண்மைக் கூறு (Realism) களை அப்படியே பிரித்து வைப்பதாகக் கூறிப் பாலுணர்ச்சி பற்றிய அரைகுறை வேக்காட்டுப் பக்குவத்தில் அமைந்த சொற்களைத் திசைமாற்றி அடுக்குவதே மறுமலர்ச்சி என்றால், இதுவும் மறுமலர்ச்சியின் ஒரு கூறு என்று கொள்ளுவதில் தவறில்லை.

அறிவுலகின் அவா:

புதிய கவிதைகள் மறுமலர்ச்சிக் காலத்தில் பெருகி வருவது வரவேற்கத் தக்கதுதான். ஆனால் அவற்றின் உள்ளீடு சமுதாய வாழ்வின் முன்னேற்றத்திற்குப் பயன் படுவதாக இருத்தல் வேண்டும் என்பதே கருதத் தக்கது. கீழ்நோக்கி யீர்க்கும் பால் உணர்ச்சியையே கருவாகக் கொண்டு குழம்பாமலும் குழப்பாமலும் உள்ளத்தை உயர்த்தும் உணர்வுடையனவாக வரும் புதுக் கவிதைகள் நிலைபேறு பெறும் என்பது உறுதி. கவிஞன் காணும் கற்பனை உலகு நடைபெறக்கூடிய உண்மைகளுக்குப் பெரிதும் புறம்போகலாகாது. அத்தகு கவிதைகளையே இன்றைய அறிவுலகு அவாவி நிற்கின்றது.

அடிக்குறிப்பு விளக்கம்.

1. 'உதயம்' — திருலோகசீதாராம் புதுப்புனல் பதிப்பகம் திருச்சி, (1958) பக். 7.
2. Ibid. பக். 13
3 Ibid. பக் 28.
4. Ibid. பக். 43.
5. பனிமுத்தம் சக்திசரணன்-புதுப்புனல் பதிப்பகம், திருச்சி, (1957) பக். 11.
6. Ibid. பக். 38.
7, பொற்சுடர்—துறைவன்—புதுப்புனல் பதிப்பகம், திருச்சி, (1958) பக். 9
8. Ibid. பக் 11.
9. Ibid. பக் 25.
10. Ibid. பக் 29.
11. Ibid. பக். 33.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இளங்கோவடிகளின் இலக்கிய அறிவு.

திரு. புலவர். **பி. விருத்தாசலம்,** பி. ஏ.

அதனால்தான். முருகப் பெருமான் போன்ற அழகுடைய கோவலன் அழகில் திருமகளையும் கற்பில் அருந்ததியையும் ஒத்தவளாகிய கண்ணகியைத் திருமணம் செய்துகொண்டு தீவலம் செய்கின்ற காட்சியைக் காண்பவர் கண்கள் முற்பிறப்பில் என்ன தவம் செய்தனவோ? என்று இளங்கோவடிகள் வியந்து கேட்கிறார்.

"சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலஞ் செய்வது காண்பார்கண் நோன்பென்னை."

(ம வா. பாடல். 51—53)

அதுமட்டுமா? ஆய்ச்சியர் குரவையில்,

'தேவர்கள் எல்லாரையும் விடப் பெரியவனும், மாயங்கள் செய்வதில் வல்லனுமாகிய திருமாலைக் காணாத கண் என்ன கண்? அவனைக் காணும்போதும் இமைக்காது காணவேண்டுமே அன்றி, இடையிடையே இமைத்துக் காண்பவர் கண் என்ன கண்?" என்றும் கேட்கின்றார் இளங்கோ.

"பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
....
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே"

(ஆய்ச்சியர் குரவை 36-ஆம் பாட்டு)

மேற்சுட்டிக் காட்டிய மங்கல வாழ்த்துப்பாடற் பகுதியையும் ஆய்ச்சியர் குரவைப் பகுதியையும் இளங்கோ எழுதிடக் "காமர் கடும்புனல் கலந்தெம்மோடு ஆடுவாள்" என்று தொடங்கும் குறிஞ்சிக் கலிப்பாட்டு வழிகாட்டிற்று எனலாம். இறைவன் அருளால் பீடுகெழு ஆடவன் ஒருவனோடு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த

நங்கை ஒருத்தியும், அவளது உயிர்த் தோழியான மங்கை ஒருத்தியும் உரையாடுகின்றனர். அப்போது தலைவனை விரைவில் மணக்கப்போகும் தலைவியைத் தோழி கேலி செய்கிருள். தமிழகப் பெண்டிர் மிகுந்த நாணம் உடையவர் நாணம் மிகுகின்றபோது தலையைத் தொங்கப் போட்டுக் கொள்வர்; நாணம் இன்னும் மிகுதியாஞல் இரண்டு கைகளாலும் கண்களை யும் முகத்தையும் பொத்திக் கொள்வர். அவ்வாறே நாளைக்குத் திருமணம் நடக்கும்போது தலைவியும் தலைவனை முன்பே பலமுறை கண்டறிந்து கூடிக் களித் தவளாஞலும், சான்ருேர் பலரும் முன்னர் இருப்பதால் நாணம் மிகுந்து தலைவனைத் தலைநிமிர்த்திப் பாராது, கைகளால் கண்களைப் பொத்திக்கொண்டு தலைகவிழ்ந்து இருப்பாள். தோழி அதைச் சுட்டிக்காட்டி, "மேகங்கள் தவழ்ந்து செல்லும் மலைகளையுடையவனை நம் தலைவனது மணக்கோலம் காணுமல் கையாலே புதைத் தலைப் பெறுகின்ற கண்களும் கண்களென்று கூறப் படுமோ? என்று வினவிஞள். (தொடரும்)

* * * *

மதிப்புரை.

:o:

மான்முருகியம் — ஆக்கியோர்:

கவிராச பண்டிதர். இராமசுப்பிரமணிய நாவலர்.

(*கிடைக்குமிடம்:* செந்தமிழ் நிலயம்-நாகர்கோவில்-2 விலை 3-00)

மான்முருகியம் என்னும் தமிழ் மருத்துவ நூலை நான்கு பகுதிகளாகத் திட்டமிட்டு, முதற் பகுதியான உடற்கூற்றுப் படலம் இதுபோது வெளியிடப்பெற்றுள்ளது. நோயா ராய்ச்சிப்படலம், மருந்துப்படலம், நோய் நீக்கற்படலம், என்னும் மற்ற மூன்று பகுதிகளும் அண்மையில் வெளிவரு மென்று தெரிகிறது. செய்யுள் வடிவில் இனிய செந்தமிழில் எழுதப்பட்டுள்ளது. மறைந்துபோன தமிழ் மருத்துவநூலை சித்த மருத்துவம் ஆயுர்வேத மருத்துவம், ஆங்கில மருத் துவம் என்ற மூன்று மருத்துவ நூல்களிலும் கூறப்பட்ட ஏற்ற முறைகளைச் சேர்த்து தனித்தமிழ்ச் சொற்களுடன் உருவாக்கியுள்ளார்.

கையறவு

…

க. தியாகராச பிள்ளை :

நம் சங்கத்தின்பால் நீங்காப்பற்றுடையவரும், கொடையாளரும், சங்கவாணாள் உறுப்பினருமாய திரு. க. தியாகராசப் பிள்ளை, B. A., M. I. E., (K. T. Pillai) அவர்கள் கடந்த 15—11—69 சனி இரவு 9—00 மணிக்கு, கல்கத்தாவில் இயற்கையெய்தினர் எனும் செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சங்கம் அமைத்த மருத்துவ நிலையத்தைத் திறம்பட நடத்திய வ. ம. கண்ணுசாமிப்பிள்ளை அவர்களின் மூத்தமகனாராய்த் தோன்றி நல்லறிவும், நற்பண்பும் கைவரப்பெற்று மின்பொறி வல்லுநராய் விளங்கினர். அவ்வப்போது தம்மால் இயன்ற உதவிகளைச் சங்கத்திற்குத் தளராது செய்துவந்தார். அன்னாரின் மறைவிற்கு ஆழ்ந்த கவலையினைத் தெரிவிக்கும் முகத்தான் சங்கக்கல்வி நிலையங்கள் அனைத்தும் 17—11—69 திங்களன்று மூடப்பட்டிருந்தன. இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி அன்னாரின் குடும்பத்தாருக்கு அனுப்பிவைக்கப்பெற்றது. பல்லாற்றானும் தன்னலங்கருதாது தொண்டாற்றி மறைந்த அவரின் இன்னுயிர் இறைவனடியெய்தி இன்புறுவதாக.

பண்டித. அ. கந்தசாமி பிள்ளை :

கரந்தைத்தமிழ்ச்சங்கத்துடன் நெடுநாள் தொடர்புடையவரும், தமிழ்ப் பேரன்பருமாய பண்டித. அ. கந்தசாமி பிள்ளை (பேரூர்) அவர்கள் 15 11—69 சனி மாலை 6—00 மணியளவில் சிவனடி அடைந்தார்கள். 16—11—69 ஞாயிறு பிற்பகலில் நடைபெற்ற இறுதிச் சடங்கில் தமிழகத் தமிழாசிரியர் கழகத் தலைவர் திரு நா. துரைசாமி அவர்களும், தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகளாரும், பல தமிழறிஞர்களும், தமிழாசிரியப் பெருமக்களும், அன்பர்களும் பெருமளவில் கலந்துகொண்டனர். 17—11—69 திங்களன்று நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் தமிழன்பர்கள் பலர், அய்யா அவர்களின் தமிழ்ப் புலமை, சைவசமயத்திற்கு ஆற்றிய தொண்டு மற்றும் பல்வேறு கல்லூரிகளில் ஆற்றிய பணி, தொடக்கமுதல் பிறர்க்கெனவே புலமையால் உதவிசெய்தமை, முதுபெரும் சான்றோர்களின் தொடர்பு பற்றிப் பேசினார்கள். மறைந்த புலவர் அவர்களின் குடும்பத்தாருக்குக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தாரின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.